சுருக்கம்

தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் – தேர்வுப்பிரிவு – பட்டயத் தேர்வுகள் – பட்டயப்படிப்பினை முடித்து, தேர்வு எழுத வழங்கப்பட்ட வாய்ப்புகளையும் முடித்து தேர்ச்சி பெறாமல் நிலுவைப்பாடங்கள் வைத்துள்ள மாணாக்கர்களுக்கு எதிர்வரும் அக்டோபர் 2026 மற்றும் ஏப்ரல் 2027 பருவத்தேர்வுகளின் போது மட்டும் தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்கியும் மற்றும் தேர்வுக் கட்டணம் நிர்ணயம் செய்தும் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (பி1) துறை

அரசாணை (நிலை) எண். 98

நாள்: 02.06.2026.
ஸ்ரீ பராபவ வருடம், வைகாசி-19
திருவள்ளுவர் ஆண்டு 2057

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (டி.) எண்.14, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 23.01.2015
2. அரசாணை (டி.) எண்.326, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 22.09.2016
3. அரசாணை (டி.) எண்.335, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 09.11.2017
4. அரசாணை (நிலை) எண்.153, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 12.06.2019
5. அரசாணை (நிலை) எண்.157, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 10.08.2021.
6. அரசாணை (நிலை) எண்.41, உயர்கல்வி(பி1)த் துறை, நாள் 14.03.2025.
7. தேர்வுவாரியத்தலைவர், தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் அவர்களின் கடித எண்.DoTE/526/2026-M1, நாள் 26.02.2026.

ஆணை:

மேலே முதலாவது முதல் ஆறாவது வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் பட்டயக் கல்வியை முடித்து, தேர்வு வழுத வழங்கப்பட்ட வாய்ப்புகளையும் முடித்து, தேர்ச்சி பெறாமல் நிலுவை பாடங்கள் (Arrears) வைத்துள்ள மாணாக்கர்களுக்கு முறையே ஏப்ரல் 2015, அக்டோபர் 2015, அக்டோபர் 2016, ஏப்ரல் 2017, ஏப்ரல் 2018, அக்டோபர் 2018, அக்டோபர் 2019, ஏப்ரல் 2020, ஏப்ரல் 2021, அக்டோபர் 2021, ஏப்ரல் 2022, அக்டோபர் 2022, ஏப்ரல் 2025 மற்றும் அக்டோபர் 2025-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பருவத் தேர்வுகளில் கலந்து கொள்வதற்கான சிறப்பு வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

-2

File No. DOTE/526/2026-M1 (Computer No. 707081)

2. மேலே, ஏழாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவர் அவர்கள் பலவகை தொழில்நுட்ப கல்லூரிகளில் சிறப்பு வாய்ப்புகள் வழங்கப்பட்டும் பருவத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல் நிலுவை வைத்துள்ள மாணாக்கர்கள், அந்நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறுவதற்காக எதிர்வரும் பருவத் தேர்வுகளில் கலந்து கொள்ள தங்களுக்கு வாய்ப்பினை வழங்குமாறு அவ்வியக்ககத்திற்கு கோரிக்கைகள் வருகின்றன என்றும், அம்மாணாக்கர்களின் நலன் கருதி, எதிர்வரும் அக்டோபர் 2026 மற்றும் ஏப்ரல் 2027 பருவத் தேர்வுகளின் போது மட்டும், பட்டயக் கல்வியினை முடித்து நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல் உள்ள சுமார் 2000 மாணாக்கர்களுக்கு சிறப்பு வாய்ப்பின் (Grace Chance) மூலம் தேர்வு எழுதவும், அத்தேர்வினை எழுதும் மாணாக்கர்களுக்கு மட்டும் கீழ்க்கண்டவாறு தேர்வுக் கட்டணத்தினை நிர்ணயம் செய்தும் அரசாணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

வ.எண்	விவரம்	கட்டணம் ரூ.
1.	சிறப்பு வாய்ப்பிற்கான (Grace Chance) பதிவுக் கட்டணம்	750/-
2.	ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ்	40/-
3.	விண்ணப்பக் கட்டணம்	30/-
4.	ஒரு பாடத்திற்கான தேர்வு கட்டணம்	65/-

3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து மாணாக்கர்களின் நலன் கருதி பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

i) பட்டயக் கல்வியினை முடித்து நிலுவைப் பாடங்களில் தேர்ச்சி பெறாமல் உள்ள சுமார் 2000 மாணாக்கர்களுக்கு அக்டோபர் 2026 மற்றும் ஏப்ரல் 2027 பருவத் தேர்வுகளின் போது மட்டும் தேர்வு எழுத சிறப்பு வாய்ப்பு (Grace Chance) வழங்கப்படுகிறது.

-3

File No. DOTE/526/2026-M1 (Computer No. 707081)

ii) சிறப்பு வாய்ப்பின் மூலம் பட்டயத் தேர்வு எழுதும் அம்மாணாக்கர்களுக்கு சிறப்பு வாய்ப்பிற்கான (Grace Chance) பதிவுக் கட்டணமாக ரூ.750/-யையும், ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் பெறுவதற்கான கட்டணமாக ரூ.40/-யையும், விண்ணப்பக் கட்டணமாக ரூ.30/-யையும் மற்றும் ஒரு பாடத்திற்கான தேர்வு கட்டணமாக ரூ.65/-யையும் நிர்ணயம் செய்தும் மற்றும் அதனை வசூலிக்க தொழில்நுட்ப கல்வி இயக்கக வரியத் தலைவருக்கு அனுமதியும் வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.அருண் ராய்
அரசு செயலாளர்

745

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவர், சென்னை-25.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-35
நகல்:
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
உயர்கல்வித்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9
இ.கோ/உதிரி (efile No.817/பி1/2026)

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

2/6/2026

அரசு சார்புச் செயலாளர்

02/06/26

File No. DOTE/526/2026-M1 (Computer No. 707081)

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 600 025.

மேற்குறிப்பாணை எண்.DOTE /526/2026–M1, நாள் 08.06.2026

பார்வை: அரசாணை (நிலை) எண்.98, உயர்கல்வி (பி1) துறை
நாள் 02.06.2026.

பார்வையில் காணும் அரசாணையின் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : மேற்படி

ஒம்/– ஜோ. அ. ராஜ்நந்தினி
கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)

பெறுநர்

அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி
பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்கள்

நகல் 1. தேர்வு வாரியத் தலைவரின் மேஜைக்கு

2. கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)
3. கூடுதல் இயக்குநர் (பாலி.) (மு.கூ.பொ.)
4. உதவி இயக்குநர் (தேர்வுகள்)
5. உதவி இயக்குநர் (திட்டம்),
6. தனி அலுவலர் (பாடத் திட்ட வளர்ச்சி மையம்)
7. வட்டார அலுவலர் –IV
8. வட்டார அலுவலர் –II
9. தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்)
10. தொழில்நுட்ப உதவியாளர் (மின்னியல்)
11. தொழில்நுட்ப உதவியாளர் (மதிப்பீடு – I)
12. அட்டவணை உதவியாளர் (கணினி),
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 600 025.
13. எம் 1" இருக்கை
14. இருப்புக் கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வட்டார அலுவலர் III

File No. DOTE/526/2026-M1 (Computer No. 707081)